உ

சிவமயம்



வேலணை மேற்கு

அமரர் திருமதி. முத்துத்தம்பி சிவயோகம்

அவர்களது

சிவபதப்பேறு குறித்த

# யோகாஞ்சலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10-02-2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேலணை மேற்கை பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் திருமதி முத்துத்தம்பி சிவயோகம்

அவர்களது

## 31ம் நாள் நினைவு மலர்

**10.02.2004**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# அமரர் திருமதி முத்துத்தம்பி சிவயோகம்

## அவர்கள்

மண்ணில்
**04.02.1926**

விண்ணில்
**11-01-2004**

## திதி நிர்ணய வெண்பா

மார்கழி மாதத்தோர் மதிதேய் சதுர்த்திநாள்
ஆர்கலிசூ ழுலகுவிட் டகன்றாள் - பேர்சொல்
தவமார்ந்த முத்துத் தம்பிமனை சிவயோகம்
பவனார் அடிநிழல் பூர்த்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சமர்ப்பணம்

**'துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து**

**இறந்தாரை எண்ணிக் கொண்டற்று'**

என்பது திருவள்ளுவர் வாக்கு.

**குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து**

**அன்போடும் பண்போடும்**

**பாசத்தோடும் பேணிப் பாதுகாத்து**

**எம்மைநல்வழி நடத்தி**

**இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட**

**எமது அன்புத் தெய்வத்தின்**

**பொன்னடிகளில் காணிக்கையாக**

**இந்நினைவு மலரினைச்**

**சமர்ப்பிக்கின்றோம்**

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# தோத்திர மாலை

## தேவாரம்

தந்தையார் போயினார் தாயாரும்
போயினார் தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார்
பார்க்கின்றார் கொண்டு போவார்
எந்த நாள் வாழ்வதற்கே மனம்வைத்
தியால் ஏழை நெஞ்சே
அந்தணாரூர் தொரு துய்யலாம்
மையல் கொண்டஞ்சல் நெஞ்சே.

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேனுடை யாயென்னைக் கண்டுகொள்ளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண் டசுரு திப்பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யுஞ்சில
தேவர் சிவநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருமந்திரம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதுதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியி லுறைபவர்
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிள் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகெட சுப்பிர மணிபடும்
அப்புனம் அதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருஅருட்பா

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவுவேண்டும்
உள்ஒன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண் டும்பொய்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்மத மானபேய்
பிடியா திருக்கவேண்டும்
மருவுபெண் ஆசையை மறக்க வேண்டும்உனை
மறவா திருக்கவேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில் நான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள் வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிராமியம்மை பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய! நின்பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டுகண்டாய்!
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமி அருள்வாமியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருப்பள்ளி எழுச்சி

திருச்சிற்றம்பலம்

போற்றிஎன் வாழ்முதல் ஆகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியிடை யாய்எனை உடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 1

அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம் நின் மலர்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல்அங் கண்ணாம்
திரள்நிரை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்:
ஓவின தாரகை ஒளிஒளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவ நற் செறிகழற் றாளிணை காட்டாய்!
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய் எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 3

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே.
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 4

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாய்எங்கள் முன்வந்
தேதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 6

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவன்அவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 7

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டார்

விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்

மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே

வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்

கண்ணகத் தேநின்று களிதரு தேனே

கடலமு தேகரும் பேவிரும் படியார்

எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்

எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 9

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்

போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி

சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்

திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்

அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்

படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்

அவனியிற் புகந்தெமை ஆட்கொள்ள வல்லாய்

ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 10

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பர்யாம் ஆரேலோ ரெம்பாவாய். 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய். 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்(து)
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய். 4

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேஎன்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். 6

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயில் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண்ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடிச் செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய். 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம்ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கியெழுந் துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளிமழுங்கித் தாரகைகள் தாம்அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்(று)
அங்கப் பழஞ்சொற் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். 20

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஔவையார் அருளிய

# விநாயகர் அகவல்

## காப்பு

அற்புதவி நாயகர்தம் ஆசிரியர் பாவுரையைச்
சொற்பொருளின் குற்றமின்றிச் சொல்லவே முற்படுசீர்ச்
சொற்பொருளெல் லாங்கடந்து தூய்தாம் மெய்ஞ்ஞானமிகு
கற்பக விநாயகன்றாள் காப்பு.

## நூல்

சீதக் களபச்செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விழங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம்நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழு தென்னை ஆட்கொள்ள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தனில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளி
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழிமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்தி
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூக்ஷமமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்து அருள்வழி காட்டி
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

(விநாயகர் அகவல் முற்றிற்று.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கந்தசஷ்டி கவசம்

**காப்பு**

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலர் அருள்கந்தர்
சஷ்டி கவசம் தனை.

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

**நூல்**

சஷ்டியை நோக்கச் சரவணபவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம்பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வர வர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப்பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொகமொகமொகமொகமொகமொகமொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென்றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதுமெனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி ல்நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்லபூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களைத் தொடரும் பிரமரா க்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும், காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும், ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட,
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட்டோடப்
படியினிற் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு!
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலியும் கரடியும் இனித்தொடர்ந்தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடுத்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினி லிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரீதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே! சையொளி பவனே!
திரிபுர பவனே! திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவமொழி பவனே!
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வேலவனே!
கார்த்திகை மைந்தா கடம்பா! கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா!
தணிகா சலனே சங்கரன் புதல்வா!
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா!
பழநிப் பதிவாழ் பால குமாரா!
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா!
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா!
சமரா புரிவாழ் சண்முகத் தரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னாவிருக்க, யானுனைப் பாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற்றடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க!
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்!
வாழ்க வாழ்க வாரணத் துவசம்!
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகி
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயலதருளுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்ரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினிலிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

(கந்தசஷ்டி கவசம் முற்றிற்று)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஆஞ்சநேயர் அருள் கவசம்

யானை முகனே ஞானக் கனியே
தேனாக கவசம் கா.

வெற்றிலை மாலை சூடிடும்
வீரனே விண்ணப்பம் தேவனே!
சுற்றிவரும் துயர்த் தூளாக
தூயக் காற்றாய் சுவாசிக்க வா!
கற்றிடும் அறிஞரில் இமயமே!
காசினி போற்றிடும் தெய்வமே!
பற்றுடன் எம்மைப் பாதுகாக்க
பாடும் கவசம் காக்க!

அறிவுஜீவி சுக்ரீவன் மந்திரி
அடியேன் தலையை காக்க.
நெறியாக காரியம் புரியும்
நிகரில்லா மகாவீரன் அனுமான்
சரியாக நெற்றியை காக்க.
சகலகலா வல்ல வாயுபுத்ரன்
குறியாக புருவத்தை காக்க.
கூடவே நின்று காக்க. 1

பூதத்தின் நிழலை பிடித்து
போயோழி என்ற ழித்தவன்
நேத்திரம் இரண்டை காக்க.
நிஜமான தூதன் காக்க.
காத்திரமான வானர தலைவன்
கன்னங்களைக் காக்க. காக்க.
தோத்திரிக்கும் ராம தொண்டன்
தூய காதினை காக்க. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சனா தேவியின் மைந்தன்
அருமை நாசியை காக்க.
அஞ்சாத வானர அதிபன்
அழகு முகத்தைக் காக்க.
வெஞ்சமரில் அசுரரை அழித்த
வீரகேசரி கழுத்தைக் காக்க.
தஞ்சமென தேவர்கள் வழிபட்ட
தலைவன் தோள்களை காக்க. 3

பூக்கும் எழில் புயலோன்
புஜங்களை காக்க காக்க.
காக்கும் ஆயுதம் கதையாக
கைகளை காக்க. காக்க.
நகத்தையே ஆயுதமாக்கிய
நாயகன் நகங்களை காக்க.
ஜெகத்தில் குரங்கின கிரீடன்
சிறந்த வயிற்றை காக்க. 4

சோதியாய் உதித்த ராமரின்
சூரனின் சூரனாய் தூதனாய் இலங்கைக்கு,
மோதிரத்தை ஏந்திச் சென்றவன்,
முழுமனதையும் காக்க.
நீதியாய் பேசும் மாருதி
நெஞ்ச விலாவை காக்க.
சீதையின் கவலையை நீக்கியவன்
சீரான மார்பை காக்க. 5

இலங்கையை எரித்த தூதன்
எந்தன் முதுகை காக்க.
நலமான ராமனின் சேவகன்
நாபியை காக்க. காக்க.
பலமான வாயுவின் மைந்தன்
பலசாலியான இடுப்பை காக்க
வளமாக வாழ என்றும்
வயிற்றுப் பகுதியை காக்க. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவின் சிகரம் ஆஞ்சநேயன்
அற்புத ஜீவகுறியை காக்க.
பிரியமாய் இமயச் சிவனின்
பேரன்பு பெற்ற பக்தன்
பெருந் தொடை இணையை காக்க.
பெருங் கோபம் மூண்டு
இராவண கோட்டையை உடைத்தவன்
இடை, தொடைகளை காக்க. 7

சூரியமதி மிக்க வானரன்
கூர்ந்து முழங்காலை காக்க
வீரிய மிகுந்த மகாவீரன்
விரும்பி கணைக்கால்களை காக்க.
சூரியனாய் சுடர்விடும் நேரியன்
சுகம்பெற சஞ்சீவி மலையை
தீரமாய் தூக்கி வந்தவன்
திடமான கால்களை காக்க. 8

காற்றின் புத்திரன் கானக
வானரக் கூட்டத் தலைவன்
போற்றி பணியும் அங்கங்களை
புதுசக்தி தந்து காக்க.
ஆற்றல் அதிகம் பெற்றவன்
அற்புத வீரன் அனுமான்
காற்றாய் கடுகி வந்து
தேக மெங்கும் காக்க. 9

உள்ளத்தை அடக்கி ஒருவனையே
ஓதும் ராம பக்தன்
வெள்ளமாய் அன்பு பெருகி,
வினைகள் செய்யும் சித்தன்
சொல்லுக்குச்சொல் ராமென, வோதும்
சோர்விலா ராம தூதன்
எல்லையில்லா வலிமை பெற்ற
இனிய அனுமான் காக்க. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய கிழக்கில் ஆஞ்சநேயம்
உடன் வந்து காக்க.
இதயம் இயங்க காற்றாகி
மேற்கில் வாயுபத்திரன் காக்க.
நிதமும் தெற்கில் கதாயுதம்
நிமிர்ந்து வந்து காக்க.
அதம்புரிய கடலை தாண்டிய
அனுமான் வடக்கில் காக்க. 11

ஆகாயத்தில் கேசரி காக்க.
அருள் மழையாகி காக்க.
சோக மெல்லாம் நீங்க
சுந்தர லங்கையை எரித்த,
சாகச வீரன் ராமதூதன்
சடுதியில் வந்து காக்க.
மேக வர்ண பக்தன்
மேதினியில் என்றும் காக்க. 12

மந்திரியாய் சேவகனாய் மாருதி
மாசற்ற அறிவின் கூர்நிதி
தந்திரமாய் தூது சென்று
தாய் சீதையைக் கண்டு
எந்திரமாய் பேருரு பூண்டு
இலங்கையை எரித்து மீண்ட
சுந்தர ராமனின் தூதன்
துயர் தீர்த்து காக்க. 13

வியாழ தினத்தின் வேந்தே!
வெவண்டன் மலையில் பாதம்
புயலாய் பாய்ந்து பதிந்த
புத்திமிகு ஆஞ்ச நேயனே!
நயமான சொல்லின் செல்வனே!
ராவணன் கர்வம் அடக்கிய
புயலே! காற்றே!! தென்றலே!!!
பூஜிக்கும் என்னை காக்க. 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடைமாலை சூடி வணங்கும்
வளமான அடியார் களுக்கு
தடைகள் எல்லாம் நீக்கி
தளராத வாழ்வு தருவாயே!
படையாக ராமனின் பக்கம்
பலமாக நின்று வென்றாய்!
விடையாகி, விரிந்த அறிவாகி
விளம்பும் மொழி காக்க! 15

தீயில் எரிந்தது இலங்கையா!
இல்லை! தீதான அதர்மங்கள்
கோயிலில் கும்பிட்டு நிற்கும்
கோவே காக்க. காக்க..
தாயினும் துணையாய் வந்து
தமியேனை காக்க, காக்க..
நேயமிகு ஆஞ்ச நேயனே
நெஞ்சில் நின்று காக்க. 16

வில்விஜயன் தேரில் பறந்த
வெற்றிக் கொடியின் சின்னமே!
சொல்லிய கீதை பொருளை
சுருக்கிக் கேட்ட எண்ணமே!
நல்லவர் வாழ என்றும்
நன்மைகள் சூழ காக்க.
வல்ல அருளாகி காக்க.
வானர தலைவனே காக்க. 17

சிரஞ்சீவியாய் வாழும் தேவனே!
தேகபலம் தந்து காக்க.
உறுதியான மனம் ஈந்து
உற்றத் துணையாக காக்க.
இறுதிவரை இப்புவி மீதினில்
இன்பமாய் வாழ காக்க.
துறவியே, தோழனே, தூதனே!
தோள் பலமாக காக்க. 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலே ஆசனமாக அமர்ந்து
வசனம் பேசிய மந்திரியே
சூழும் சூரர்களை சுட்டெரிக்க
சுடும்வாலை வீசிய தந்திரியே!
நாளும் உனை நினைக்கும்
நல்லடியார்களை காக்க.
வாழும் காலத்தில் வளமாய்
வாழ்ந்திட கேசரி காக்க. 19

உலகம் எங்கும் கலகம்
உருவாக மக்கள் எல்லாம்
நலமாக வாழ முடியாது
நலிந்து மெலிந்து போக.
நிலத்தில் நீதி மறைய
நெறி நீங்கி வெறியாக,
கலகம் கலகம் கலியுகத்தில்
கதையோடு வந்து காக்க. 20

கலியுகம் முற்றி அழிவு
கவனமாய் அனுமான் காக்க
வலிமை பெற்ற வீரகேசரி
வானமாய் வளர்ந்து காக்க.
செழிப்பாய் தர்மம் வளர,
ஜெகத்தில் சாந்தி நிலவ,
விழிப்பாய் மாருதி வந்து
விரும்பி காக்க. காக்க.. 21

தொற்று நோய்கள் தூரமாக
தொடரும் பற்று விலக.
கற்ற கல்விப் பெருக.
கடுந் துயரம் கடுகாக
முற்றும் துறந்த ஞானியே!
மோகம் மறந்த முனியே!
சுற்றி வந்து காக்க.
சுடராகி நின்று காக்க. 22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமை துயர் மறைய
வானர தேவளே காக்க.
பொறுமையாய் உனை பணிய
புதிய காற்றாகி காக்க.
தரும நெறிகள் தழைக்க
சத்தியம் என்றும் ஜெயிக்க,
இராம ராஜ்யம் பூக்க
இராம தூதனே காக்க. 23

தூய மனம் தந்திடு
துதிக்க தினம் வந்திடு
நேயனே நெஞ்சின் சுவாசமே!
நெற்றிக் குங்குமம் நிலைக்க
தாய்க் குலம் வாழ்ந்திட
தர்மமாய் வந்து காத்திடு
பேய்க் குணம் நீங்கி
பெரும் வாழ்வு வாழவிடு. 24

அஞ்சனை, மைந்தா ஆஞ்சநேயா,
அடியேன் நெஞ்சம் புகுந்து
சஞ்சலம் தீர்க்கும் சஞ்சீவியே!
சரணம் ஆஞ்சநேயா போற்றி.
தஞ்சம் ஆஞ்சநேயா போற்றி.
தடுத் தாள்வாய் போற்றி.
விஞ்சும் வேதியனே போற்றி.
வெற்றி யருள்வாய் போற்றி. 25

ராம நாமம் ஜெபிக்கும்
ராம தூதனே போற்றி
காமம் அடக்கிய ஞானியே
கலியுக தூதனே போற்றி
வீமன் வியக்க வால்வலிமையை
வீரமாக்கிய வேந்தே போற்றி
சேமமாய் ஜெகத்தை ஆக்கும்
சீராளா போற்றி போற்றி. 26



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# ஊர்காவற்றுறையைச் சார்ந்த புளியங்கூடல் செருத்தனைப்பதி

# அன்னை அருள்மிகு மகாமாரி வைபவமாலை

**காப்பு**

காரானை முகத்தானே
கற்பக விநாயகனே
ஓரானைக் கொம்பானே
உமையாள் திருமகனே
சீராரும் செருத்தனையில்
தேவிமகா மாரிபுகழ்
பாராட்டி நான்பாட
பாலகனே காப்பாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல்

01. வைத்த பத்தி குன்றாத
வைரமுத்து என்றொருவன்
கத்தியிலே வந்திருந்து
சக்தி தருபவளே
எத்திசையும் போற்றுகின்ற
எங்கள் குல மகாமாரி
சித்தமிசை குடிகொண்ட
சிவகாம சுந்தரியே.

02. செருத்தி யொடு குருந்தமரம்
சேர்ந்த பல கொன்றைமரம்
மருங்கு வளர் புளியமரம்
மல்லிகை முல்லைக் கொடியும்
கரும்பருகே கருங்குவளை
கண்வளரும் கழனிகளும்
பொருந்து புளியங்கூடல்
போற்று செருந்தனைப்பதியில்.

03. கொன்றைமர நிழலிலே
கொட்டிலிலே குடியிருந்து
கன்றை ஈன்ற பசுப்போலே
கருத்து வைத்து காத்தவளே
அன்றும் இன்றும் என்றும் எங்கள்
அருந்துணைவியாய் இருந்து
துன்று பிணி துயர் தீர்த்து
தூக்கி எம்மை வளர்த்தவளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. வேதாகம விதிகள்
விளங்காத காலத்திலே
தோதாக மரபுவழிப்
பூசைகளை ஏற்றவளே
ஆதார மில்லாத
ஆடு கோழி வேள்விபலி
பூதவழி பாடுகளும்
பூசைகளும் ஏற்றவளே.

05. காத்தான் கறுப்பனொடு
கருதுபல பூதகணம்
சேர்த்தாட மடைபோட்டு
பார்த்தாடும் பேய்களொடு
ஆர்த்தாடும் மாரியம்மா
அம்பலத்தில் ஆடுகின்ற
கூத்துக்களை ஆடி எங்கள்
குறைபலவும் தீர்த்தவளே.

06. தங்கு புகழ்க் கதிரேசர்
தம்பர் எனும் தாபகர்கள்
முந்து முந்தன் கோவிலிலே
மூட்டி வைத்தமால் ஒன்று
அங்கி தனைக் கிரையாக
ஆர்வமொடு சுப்பிரமணி
தங்கு தலம் சீரமைக்க
கங்கணமும் கட்டினனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. கட்டுகின்ற திருக்கோவில்
கடுகதியிலே வளர்ந்து
அட்டதிக்கும் மண்டபங்கள்
அழகுடனே பலவளர்ந்து
புஸ்டியுடனே விளங்கப்
பொலிவு திருக்கோவில்தனை
இஷ்டமுடன் பாலித்து
இன்பம்மிக எய்தினனே.

08. பாலைமரம் வெட்டி வந்து
ஆலயத்தைக் கட்டுதற்கு
பாலகர்கள் காடு சென்று
பட்ட பாட்டை நீஉணர்ந்து
பாலமுதச் சோறு கொண்டு
படுகிழவியாக நின்று
வேலைகளைச் சுகமாக்கி
வீடுவரச் செய்தவளே.

09. பேய்க் குலங்கள் ஆட்சிசெய்த
பொல்லாத காலமதில்
தாய்க்குலத்தைக் காத்து வைத்த
தாயாரும் நீயலையோ
பேய்களொடு ஆடுகின்ற
பேய்ச்சி அம்மன்நீயலையோ
ஓயாத பேய்களை நீ
ஒடுக்கிவைத்த தாயலையோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. பேய்களை நீ ஒடுக்குதற்கு
பெருவிருப்பம் கொண்டவளாய்
சேய் சுப்ரமணிய னெனும்
சாயலிலே வந்தவளே
மாயாத பேய்களையும்
மடக்கி வைத்த மாரியம்மா
காயாத வேப்பிலையை
கையில் பிடித்தவளே.

11. வெள்ளிக் கிழமைகளில்
வேண்டுவோர் பூசை செய
துள்ளி ஆடும் பேய்களெலாம்
பூசைமுகம் கண்டவுடன்
வெள்ளிப் பிரம்போடு
வேப்பிலையும் கொண்டுவர
அள்ளிஅவை அத்தனையும்
அகன்றோடச் செய்தவளே.

12. மருவி வந்த முனி யொன்று
மைந்தன் ஒருவனைக் கொன்று
சருவி மிக வருந்தி
சடமாய்க் கிடத்திவிட
திருமகல் ஊரினிலே
திருஞானசம்பந்தர்
உயிர் கொடுத்த செட்டியைப்போல்
உயிர்கொடுத்துக் காத்தனையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. முந்து வழிப்போக்கினிலே
சந்தித்த முனியொன்று
பந்தித்த பெண்ணொருத்தி
பாடாய்க் கிடத்திவிட
வந்து உந்தன் வாசலிலே
வாய்விட்டு பலிகேட்டு
பந்தித்த பாலகியும்
பனையேறி விழ்ந்தெழுந்தாள்.

14. பிரான் பற்று எனும் ஊரில்
பேருடைய வணிகனுக்கு
தாரம் என வந்தவளை
பேய்பிடித்து பிய்த்தெடுக்க
காரணத்தை அறிந்த உந்தன்
சீரடியான் வேப்பிலையால்
பூரணமாய் நீக்கிவிட
பூவையவள் போற்றி செய்தாள்.

15. மந்திரங்கள் தந்திரங்கள்
மருந்தொன்றும் இல்லாமல்
ஏந்தியதோர் கைப்பிரம்பும்
எடுத்தவொரு வேப்பிலையும்
உந்தனது வாசலிலே
உருக் கொண்ட பேய்களையே
வெந்தழுந்த வேரறுத்து
வேதனைகள் நீக்கினையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. குன்ம நோய் பிடித்தொருவர்
குடங்கி முடிங்கி வந்து
குன்மம் தொலைந்துவிட
கூறுநாவுக்கரைசனைப் போல்
அன்னை மனம்மகிழ
அகல் விளக்குத் திருத்தொண்டும்
பண்ணும் பஜனைகளும்
பாடிப் பல்லாண்டிருந்தான்.

17. குஷ்டநோய் வயப்பட்ட
கோடிஸ்வரர் ஒருவர்
கஷ்டமுடன் வந்திருந்து
கருதுபல அபிஷேகம்
பட்சமுடனே செய்து
பாவநோய் தொலைந்துவிட
மட்டில்லா மகிழ்ச்சியொடு
மனைநோக்கிச் சென்றனனே.

18. அவுடதங்கள் இல்லாத
அக்கால சரித்திரத்தில்
விபூதி வேப்பிலையும்
தீர்த்தமொடு திருநூலும்
அநுபூதியாய்ப் பொருந்த
அர்ச்சனையும் அபிஷேகமும்
அனுதினமும் நடந்துவர
அம்பிகையே அருள்சுரந்தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. இன்னும் இன்னும் எத்தனையோ
புதுமைகளைச் செய்தவளே
சொன்னாலும் நம்பாத
துயர் சூழ்ந்த காலத்தில்
விஞ்ஞானம் பேசிடுவோர்
மெஞ்ஞானம் உணர்வோரே
கண்ணாலே கண்டவற்றை
காதோடு சொல்லி வைத்தேன்.

20. சீர்சுப்பிரமணிய னெனும்
சீரடியான் சேவையிலே
பேரருளைப் பொழிந்தவளே
பேறு பல தந்தவளே
ஆலயத்தைக் கட்டுவதற்கு
அவன் போட்ட அடிக்கல்லு
அல்லும் பகலுமென
அபிவிருத்தி எய்திடுமே.

21. தரம் மிகுந்த தண்ணளியாள்
தருசுப்ர மணியனுக்கு
இரத்த வாந்தி நீ கொடுத்து
ரத்தப் பலி நீ எடுத்தாய்
மறக்கருணை நீ தடுத்து
மண்ணுலகைக் காப்பதற்கு
அறக் கருணை நீபொழிந்தாய்
அம்பிகையே மாரியம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. கருக்கோடி கொண்டவளே
கருமாரித் தாயாரே
உருக்கோடி கொண்டவளே
ஊரெங்கும் காப்பவளே
செருக்கோ டிருப்பவரை
செருக்கடக்கும் மாரியம்மா
ஒருகோடி இன்பங்கள்
ஒரு நொடியில் தருபவளே.

23. காலையிலும் மாலையிலும்
கண்ணுறங்கும் வேளையிலும்
சோர்வுவரும் வேளையிலும்
தோன்றாத்துணை இருப்பாய்
பாலமுதக் கிண்ணத்துடன்
பாசமுடன் நீ வருவாய்
ஞாலமெலாம் ஆட்டிவைத்து
ஞான மழை நீ பொழிவாய்.

24. இமவான் திருமகளே
மகநாளில் பிறந்தவளே
அமைபூர நாளிலே
பூப்படைந்த மகமாரி
சமய புரத்தாளே
சங்கடங்கள் தீர்ப்பவளே
எமையாள இங்கு வந்த
ஏந்திழையே மகமாரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. கரைகாணா அன்புடையான்
துரையப்பா எனும்மைந்தன்
நிரையாகத் திருப்பணிகள்
நீடுபுகழ்க் கோபுரமும்
பரையே உன்வாசலிலே
பட்சமுடன் தீர்த்தக்குளம்
வரையாது தொண்டுசெய
வழிவகுத்தும் வைத்தானே.

26. தாங்காத நோய்களையும்
தடுத்து வைக்கும் ஓங்காரி
ஆங்காரம் மிஞ்சிவிட்டால்
அடக்கி வைக்கும் ஆங்காரி
தீங்குகள் மிகுந்து விட்டால்
தீக்குறிகள் காட்டுவாய்
பாங்காக வெப்பமுறை
பார்முழுதும் வீசிடுவாய்.

27. பொங்கிவரும் முத்துக்களை
போக்கியருள் என்று சொல்லி
நித்தமும் உன்னிடத்தில்
தாயாரே வந்து நின்று
அங்கு உந்தன்மனங்குளிர
அபிஷேகம் குளிர்த்தி செய
தங்கு உந்தன் தண்ணளியால்
தாபங்கள் நீக்கிடுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. சொந்தபந்தம் நீயாகி
சொத்துசுகம் நீயாகி
எந்தத்திசை போனாலும்
என்னநிலை யானாலும்
வந்திருந்துவழி காட்டி
வாழ்வளிக்கும் மகமாரி
சிந்தனையில் வந்திருந்து
பந்தனையை போக்குமம்மா.

29. போட்டி பொறாமைகளும்
போலிக் கௌரவமும்
வாட்டி வதைக்கின்ற
துப்பாக்கிச் சூடுகளும்
நாட்டில் மலிந்ததம்மா
நம்மரசி காருமம்மா
ஆட்டிப் படைப்பவரை
அலங்கோலம் செய்திடம்மா.

30. சிற்றெறும்பும் ஆனைபலம்
பெற்றுவிடும் உன்னருளால்
வெற்றுநிலம் விதைக்காமல்
விளைவுடனே நிறைந்திருக்கும்
கற்றதெல்லாம் கவியாகி
கவியமுதம் சொரிந்துவிடும்
பெற்றவளின் விழிபட்டால்
பெருகுமம்மா பேரின்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. எள்ளுக்குள் எண்ணையென
எங்கும் கலந்திருக்கும்
உன்னையல்லால் உற்றதுணை
ஒருவரையும் காணோமே
பின்னப்படும் எங்கள்
பேதமையை நீக்கிடுவாய்
அன்னை பராசக்தி
ஆண்டருள்வாய் எப்பொழுதும்.

32. திண்டாடித் திரிந்துழலும்
தீயமனச் சேட்டைகளை
கொண்டாடித் திரியாமல்
குற்றமொன்றும் செய்யாமல்
அண்டமெல்லாம் பூத்திருக்கும்
அன்னைதிருப் பாதத்தில்
மன்றாடி நில்லுங்கள்
மகாமாரி கண்திறப்பாள்.

33. உயிர்மூச்சை உள்ளிழுத்து
ஊனுடலை நாம்வளர்த்து
கயிறறுந்த பம்பரம்போல்
காலிடறி வீழாமல்
வயிறறுந்த வாழ்க்கையினை
வாழ்க்கையென நம்பாமல்
அயலிலுள்ள அம்பிகையை
அணைத்துக்கொண்டால் அரவணைப்பாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. வண்ணவண்ணப் பூக்கள் அவள்
வடிவழகைப் பார்த்துநிற்கும்
மண்ணில்உள்ள மரங்களெல்லாம்
பழம்பழுத்து சுவைகொடுக்கும்
நண்ணிவளர் ஜீவன்எலாம்
நலங்கனிந்து புகழ்பாடும்
தண்ணளியும் தர்மமுமே
தளிர்ந்துநின்று நடமாடும்.

35. மந்தமாருதம் உவந்து
மாரிக்கு சாமரைவீசும்
சந்தமொடு கடலலைகள்
சார்ந்துநின்று தாலாட்டும்
பந்தமொடு பறவையினம்
பாடுமொலி கூடிவரும்
நிந்தமொடு நீர்நிலைகள்
நிறைந்தமுதம் சொரிந்துவிடும்.

36. சந்ததமும் தாயவளை
அந்திசந்தி தாள்பணிந்தால்
வந்தவினை கடிதேகும்
வருவினைகள் மறைந்தோடும்
பந்தமெல்லாம் சிதைந்தோடும்
பாசவினை கடிதேகும்
முந்திவரும் அருளாலே
முத்திநிலை கைகூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. விட்டகுறை தொட்டகுறை
வீதியிலே நின்றகுறை
இட்டமுடன் நிறைவாகி
இதயமெல்லாம் பயிராகி
பட்டமரம் தளிர்த்துவிடும்
பாலை நிலம் பூமலரும்
தொட்டவளின் மலர்ப்பதத்தைத்
தொழுதபடி நின்றிடுவோம்.

38. பத்துநாள் திருவிழாக்கள்
பார்வதியின் சந்நிதியில்
மெத்தவி மரிசையாய்
மெய்சிலிர்க்க நடக்குதம்மா
பக்திவெள்ளம் பரந்தோடும்
பாசவினை கரைந்தோடும்
எத்திசையும் உந்தனருள்
ஏழுகடல் போல்ஒலிக்கும்.

39. பராபரி நீ வீதிவர
பாவலர்கள் பாட்டொலியும்
பிராமணர்கள் ஓதுகின்ற
வேதமொடு கீதங்களும்
திராவிடத்தில் பாடுகின்ற
தேவாரத் திருமுறையும்
அராவணிந்த அம்பிகைக்கு
அமுதமழை பொழிந்திடுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. தேவாதி தேவரெல்லாம்
பூமாரி பொழிந்துவர
பூதகண நாதரெல்லாம்
போற்றி உந்தன் புகழ்பாட
சேர்ந்தசக்தி எழுவரொடும்
திரிமூர்த்தி முனிவரொடும்
ஆதிசிவ நாயகியே
அலங்காரமாய் வருவாய்.

41. பஞ்சதுந் துவிமுழங்க
பாரிலுள்ளோர் ஆர்ப்பரிக்க
அஞ்சலிப்போர் மெய்சிலிர்த்து
ஆனந்தக் கண்ணீர்சொரிய
கொஞ்சுகிளி கைகளிலே
கூடிவிளை யாடிவர
மஞ்சமதில் நீவருவாய்
மனநிறைவைத் தந்தருள்வாய்.

42. பறைமேளம் ஆர்ப்பரிக்க
பம்பைகளும் ஆர்ப்பரிக்க
தரமான நாதஸ்வரம்
திருவீதியில் ஒலிக்க
கறங்குகின்ற மணியொலியும்
வேத்தொலியும் ஏத்தொலியும்
முரசொலியும் விழவொலியும்
விண்முகட்டைத் தொட்டிருமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. காப்புக் கலகலென
கண்டசரம் தாமசைய
பட்டுப் பளபளென
பாடகக் கால் ஆடிவர
முத்துப் பளபளென
மோதிரக் கால் நடந்துவர
எட்டுத் திசை நடத்தும்
ஏந்திழையே வலம் வருவாய்.

44. கற்பூரச் சட்டியொடு
கரகமொடு காவடிகள்
அங்கப் பிரதட்சணங்கள்
அடியழிப்பு வைபவங்கள்
ஒப்ப நடக்குதம்மா
உந்தன் திருவீதியிலே
தம்பிதங்களைப் பொறுத்து
தாயாரே துணைபுரிவாய்.

45. நாகத்தின் மீதமர்ந்து
நல்லருளைத் தருபவளே
நாகம் குடை பிடிக்க
நாகம் சாமரை வீச
நாகங்கள் தாலாட்ட
நாகங்கள் பூண்டவளே
நாகம்மை நீயலவோ
நல்லருளைத் தாருமம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46. சிங்கமிசை வீதிவரும்
சிங்கார நாச்சியாரே
சிங்கமிசை ஏறிநின்று
சங்காரம் செய்தவளே
பொங்கசுரன் குடல் எடுத்து
பொங்குதிரம் காய்ந்தவளே
பொங்காதே கடுங்கோபம்
பொறுத்திடம்மா எங்கள் குறை.

47. அண்ட சராசரத்தை
அடக்கிவைக்கும் மாகாளி
திண்டாடும் இவ்வுலகை
திருத்தி அமைத்திடுவாயே
கண்டகண்ட தெய்வமெல்லாம்
உண்டாக்கி வைத்தவளே
மண்டுசாதிச் சண்டைகளை
மடக்கி அருள் தாருமம்மா.

48. கோடி பொருள் அதிகாரம்
குடைபிடிக்க ஓடிவரும்
மாடமனை கோடிசெல்வம்
மலைமலையாத் தான்குவியும்
ஆடிவரும் அம்பிகையின்
அடிபணிந்து நின்றுவிட்டால்
கோடானும் கோடி இன்பம்
குவிந்து விடும் எங்களுக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. சிந்தனையிலே அன்புடையான்
சிவஞானச் செல்வனெனும்
மைந்தன் அன்னை உந்தனுக்கு
மனமுவந்த குடமுழுக்கும்
பந்தமுடன் பலவிழவும்
பக்திமிகு பூசைகளும்
தந்து உந்தன் அருளாட்சி
பொங்க வழி காட்டிடுவாள்.

50. மன்னுமணி மண்டபத்தை
வண்ணமுடனே சமைத்து
பன்னரிய கோபுரத்தில்
பாவைகளும் பூட்டியவன்
கன்னலென ஓசை தரும்
கண்டா மணிபெரிதாய்
உன்னரிய ஆலயத்தில்
உவப்புடனே சமைத்திடுவான்.

51. செருந்தனையே பெருவீடு
தேவி அவள் தனி வீடு
பெரியவளைத் தினம் தேடு
பேரருளைத் தினம் தேடு
பாரிலவள் புகழ் பாடு
பக்தர்களை நிதம் கூடு
காரியங்கள் கைகூடும்
கவலையெலாம் பறந்தோடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52. வாழி மிக வாழி
வானவர்கள் தாம் வாழி
சங்கரியும் சங்கரனும்
சார்ந்து மிக வாழி
எங்கும் மழை பொழிந்து
எல்லோரும் மிக வாழி
படித்தவர்கள் கேட்டவர்கள்
வாழி வாழி வாழியவே.

53. மகா மாரி அம்பிகைக்கு
மனம் நிறைந்த மங்களம்
சுகவாரி பொழிந்து தரும்
சுந்தரிக்கு மங்களம்
செகமீதில் வாழுகின்ற
சகலருக்கும் மங்களம்
அகமகிழப் படித்தவர்கள்
அனைவருக்கும் மங்களம்.

***மங்களம் மங்களம் மங்களம்***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அன்னை அபிராமி

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்குமதோய மென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழித்துணையே.

துணையுந் தொழுந் தெய்வமும் பெற்றதாயுஞ் சுருதிகளின்
பணையுங் கொழுந்தும் பதிகொண்டவே ரும்பனி மலர்ப்பூங்
கணையுங் கருப்புச் சிலையுமென் பாசாங்குச முங்கையில்
அணையுந் திரிபுரசுந்தரி யாவதறிந் தனமே.

மனிதருந் தேவரு மாயா முனிவரும் வந்து சென்னி
குனிதருஞ் சேவடிக் கோமளமே கொன்றைவார் சடைமேற்
பனிதருந் திங்களும் பாம்பும் பகீரதியும் படைத்த
புனிதரு நீயுமென் புந்தியெந் நாளும் பொருந்துகவே.

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்த வண்ணங்
காத்தவளே பின் கரந்தவளே கறைக் கண்டனுக்கு
மூத்தவளே யென்று மூவா முகுந்தற் கிளையவளே
மாத்தவளே யுன்னை யன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே.

கொடியே யிளவஞ்சிக் கொம்பே யெனக்குவம்பே பழுத்த
படியே மறையின் பரிமளமே பனிமாலி மயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்றவம்மே
அடியே னிறந்திங் கினிப்பிறவாமல் வந்தாண்டு கொள்ளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழகே அணுகாத வர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்த பின்னே.

வெறுக்குந் தகைமைகள் செய்யினும் தம்மடியாரை மிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன்றே புது நஞ்சையுண்டு
கறுக்கும் திருமிடற்றான் இடப்பாகம் கலந்த பொன்னே
மறுக்கும் தகைமைகள் செய்யினும் யான் உன்னை வாழ்த்துவனே.

தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக் கண்களே.

விழிக்கே அருளுண்டு அபிராம வல்லிக்கு வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு அவ்வழிகிடக்கப்
பழிக்கே சுழன்று வெம்பாவங்களே செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டினியே.

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளைப் புவி அடங்கக்
காத்தளை யங்குச பாசாங்குசமுங் கரும்பு மங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கொரு தீங்கில்லையே.

- அபிராமிப்பட்டர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ராகு கால துர்க்கா அஷ்டகம்

வாழ்வு ஆனவள் துர்க்கா வாக்கு மானவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தவள்
தாழ்வு அற்றவள் துர்க்கா தாயும் ஆனவள்
தாபம் நீக்கியே என்னை தாங்கும் துர்க்கையே

தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

உலகை ஈன்றவள் துர்க்கா உமையுமானவள்
உண்மையானவள் எந்தன் உயிரை காப்பவள்
நிலவில் நின்றவள் துர்க்கா நித்தை யானவள்
நிலவில் நின்றவள் எந்தன் நிதியும் துர்க்கையே (தேவி)

செம்மையானவள் துர்க்கா செபமும் மானவள்
அம்மையானவள் அன்பு தந்தை ஆனவள்
இம்மையானவள் துர்க்கா இன்பமானவள்
மும்மையானவள் என்றும் முழுமை துர்க்கையே (தேவி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிருமானவள் துர்க்கா உடலுமானவள்
உலகமானவள் எந்தன் உடமையானவள்
பயிருமானவள் துர்க்கா படரும் கொம்பவள்
பண்பு பொங்கிட என்னுள் பழுத்த துர்க்கையே (தேவி)

துன்ப மற்றவள் துர்க்கா துரிய வாழ்பவள்
துறை யுமானவள் இன்பத் தோணியானவள்
அன்பு உற்றவள் துர்க்கா அபய வீடவள்
நன்மை தங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே (தேவி)

குருவுமானவள் துர்க்கா குழந்தையானவள்
குலமுமானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவுமானவள் துர்க்கா திரிசூலி மாயவள்
திருநீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே (தேவி)

ராகு தேவனின் பெரும் பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் என்னை தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயே வேண்டினேன்
ராகு துர்க்கையே என்னை காக்கும் துர்க்கையே (தேவி)

கன்னி துர்க்கையே இதய கமல துர்க்கையே
கருணை துர்க்கையே வீரக் கனக துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்பு துர்க்கையே ஜெய துர்க்கை துர்க்கையே (தேவி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவான் ஸ்ரீ சத்ய சாயி

## அஷ்டோத்ர சத நாமாவளி – தமிழ்

01. ஓம் ஸ்ரீ பகவான் ஸ்ரீ ஸத்ய சாயி பாபாவுக்கு வணக்கம்.
02. ஓம் சத்திய வடிவினனான ஸ்ரீ சாயிக்கு வணக்கம்.
03. ஓம் சத்தியத்திலும் தர்மத்திலுமே ஈடுபட்டிருப்பவருக்கு வணக்கம்.
04. ஓம் வரங்களைக் கொடுப்பவருக்கு வணக்கம்.
05. ஓம் என்றும் நிலை பெற்ற புருஷருக்கு வணக்கம்.
06. ஓம் சத்ய குண ஸ்வரூபத்திற்கு வணக்கம் என்றும் மாறாத கல்யாண குணங்களின் வடிவத்திற்கு வணக்கம்.
07. ஓம் சாதுக்களைப் பெருக்குபவருக்கு வணக்கம்.
08. ஓம் சாது ஜனங்களை வளர்ப்பவருக்கு காப்பவருக்கு வணக்கம்.
09. ஓம் எல்லாவற்றையும் அறிந்தவருக்கு (உணர்ந்த வருக்கு) வணக்கம்.
10. ஓம் எல்லாவிதமான மக்களாலும் விரும்பப்படுபவருக்கு வணக்கம்.
11. ஓம் எல்லாவித சக்திகளுடைய திருவுருவமாய் இருப்பவருக்கு வணக்கம்.
12. ஓம் எல்லாவற்றுக்கும் தலைவராக இருப்பவருக்கு வணக்கம்.
13. ஓம் எல்லாவித பற்றுக்களையும் விட்டுவிட்டவருக்கு வணக்கம்.
14. ஓம் எல்லாவற்றையும் உள்ளிருந்து இயக்குபவருக்கு வணக்கம்.
15. ஓம் மஹிமை ஸ்வரூபமாயிருப்பவருக்கு வணக்கம்.
16. ஓம் மகேஸ்வர வடிவினனுக்கு (சிவஸ்வரூபிக்கு) வணக்கம்.
17. ஓம் பர்த்தி கிராமத்தில் அவதரித்தவருக்கு வணக்கம்.
18. ஓம் பர்த்தி க்ஷேத்திரத்தில் வசிப்பவருக்கு வணக்கம்.
19. ஓம் புகழுடம்பில் ஷிரடியில் வசிப்பவருக்கு வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. ஓம் ஜோடி ஆதிபள்ளி சோமப்பாவுக்கு வணக்கம்.

21. ஓம் பாரத்வாஜ ரிஷி கோத்திரத்தைச் சேர்ந்தவருக்கு வணக்கம்.

22. ஓம் பக்த வத்ஸலனுக்கு வணக்கம்.

23. ஓம் (பிறவிக்) கடலைக் கடந்த ஆத்மாவுக்கு வணக்கம்.

24. ஓம் அவதார மூர்த்திக்கு வணக்கம்.

25. ஓம் எல்லாவித அச்சங்களைப் போக்குபவருக்கு வணக்கம்.

26. ஓம் ஆபஸ்தம்ப ஸூத்ரத்தைச் சேர்ந்தவருக்கு வணக்கம்.

27. ஓம் பயத்தைப் போக்கி தஞ்சம் அருள்பவருக்கு வணக்கம்.

28. ஓம் இரத்தினாகர வம்சத்தில் அவதரித்தவருக்கு வணக்கம்.

29. ஓம் சீரடி சாயி (யாகவந்த) வேறுபாடற்ற சக்தியின் அவதாரத்திற்கு வணக்கம்.

30. ஓம் சங்கரருக்கு வணக்கம்.

31. ஓம் சீரடி சாயியின் உருவம் உடையவருக்கு வணக்கம்.

32. ஓம் த்வாரகாமாயியில் வசிப்பவருக்கு வணக்கம்.

33. ஓம் சித்ராவதியின் கரையில் (உள்ள) புட்டபர்த்தியில் இருப்பவருக்கு வணக்கம்.

34. ஓம் ஆற்றலை அருள்பவருக்கு வணக்கம்.

35. ஓம் தன்னைச் சரணடைந்தவர்களைக் காப்பவருக்கு வணக்கம்.

36. ஓம் ஆனந்தத்திற்கு வணக்கம்.

37. ஓம் ஆனந்தத்தை அருள்பவருக்கு வணக்கம்.

38. ஓம் துன்பமுற்றோரைக் காப்பாற்றுவதிலேயே ஈடுபட்டிருப்பவருக்கு வணக்கம்.

39. ஓம் திக்கற்றோரைக் காப்பவருக்கு வணக்கம்.

40. ஓம் உதவியற்றோருக்கு உதவி செய்பவருக்கு வணக்கம்.

41. ஓம் உலகத்தில் உள்ளவர்களிடம் அன்புசெய்பவருக்கு வணக்கம்.

42. ஓம் உலகத்தின் பாதுகாப்பிலேயே ஈடுபட்டிருப்பவருக்கு வணக்கம்.

43. ஓம் உலகத்தின் நாயகனுக்கு வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. ஓம் உதவியற்ற ஜனங்களைக் காப்பவருக்கு வணக்கம்.

45. ஓம் மும்மூர்த்தி வடிவினனுக்கு வணக்கம்.

46. ஓம் மோக்ஷத்தை நல்குபவருக்கு வணக்கம்.

47. ஓம் குறையொன்றும் இல்லாதவருக்கு வணக்கம். குற்றங்களிலிருந்து மிகத் தூரத்தில் இருப்பவருக்கு வணக்கம்.

48. ஓம் கருணையின் இருப்பிடமானவருக்கு வணக்கம்.

49. ஓம் அனைத்துக்கும் அடிப்படையாக இருப்பவருக்கு வணக்கம்.

50. ஓம் எல்லா இதயங்களிலும் வசிப்பவருக்கு வணக்கம்.

51. ஓம் எல்லாப் புண்ணியங்களின் பலனையும் நல்குபவருக்கு வணக்கம்.

52. ஓம் எல்லாப் பாவங்களையும் போக்குபவருக்கு வணக்கம்.

53. ஓம் எல்லா வியாதிகளையும் நிவர்த்தி செய்பவருக்கு வணக்கம்.

54. ஓம் எல்லாத் தொந்தரவுகளையும் அழிப்பவருக்கு வணக்கம்.

55. ஓம் எண்ணற்ற துதிகளை ஆக்கியவருக்கு வணக்கம். அல்லது எண்ணற்ற துதிகளால் புகழப்படுபவருக்கு வணக்கம்.

56. ஓம் ஆதி புருஷருக்கு வணக்கம்.

57. ஓம் ஆதி சக்திக்கு வணக்கம்.

58. ஓம் எல்லையற்ற ஆற்றலை உடையவருக்கு வணக்கம்.

59. ஓம் புலன்களுக்குப் புலப்படாத வடிவத்தை உடைய வருக்கு வணக்கம்.

60. ஓம் ஆசைகளையும் கோபத்தையும் அழிப்பவருக்கு வணக்கம்.

61. ஓம் பொன்னாடையை (பீதாம்பரத்தை) அணிபவருக்கு வணக்கம்.

62. ஓம் அற்புதமான செயல்களைச் செய்பவருக்கு வணக்கம்.

63. ஓம் ஆபத்திலிருந்து விடுவிப்பவருக்கு வணக்கம்.

64. ஓம் பிரேம ஸ்வரூபத்துக்கு வணக்கம்.

65. ஓம் பிரேம மூர்த்திக்கு வணக்கம்.

66. ஓம் பிரேமையை அருள்பவருக்கு வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

67. ஓம் பிரியனுக்கு விரும்பப்படுபவருக்கு வணக்கம்.
68. ஓம் பக்தர்களுக்கு பிரியனாயிருப்பவருக்கு வணக்கம்.
69. ஓம் பக்தர்களுக்குக் கற்பகதருவாயிருப்பவருக்கு வணக்கம்.
70. ஓம் பக்த ஜனங்களின் உள்ளங்களில் வசிப்பவருக்கு வணக்கம்.
71. ஓம் பக்த ஜனங்களின் உள்ளங்களை ஆலயமாய் உடையவருக்கு வணக்கம்.
72. ஓம் பக்தர்களின் ஆட்சியிலுள்ளவர்களுக்கு வணக்கம்.
73. ஓம் பக்தி ஞானம் எனப்படும் சிறந்த தீபமாய் இருப்பவருக்கு வணக்கம்.
74. ஓம் பக்தி ஞானங்களை அருள்பவருக்கு வணக்கம்.
75. ஓம் நல்ல ஞான நெறியைக் காட்டுபவருக்கு வணக்கம்.
76. ஓம் ஞான ஸ்வரூபிக்கு வணக்கம்.
77. ஓம் கீதையைப் போதிப்பவருக்கு வணக்கம்.
78. ஓம் ஞான வெற்றியை தூய்மையை அளிப்பவருக்கு வணக்கம்.
79. ஓம் அழகிய வடிவத்தை உடையவருக்கு வணக்கம்.
80. ஓம் புண்ணிய புருஷருக்கு வணக்கம்.
81. ஓம் நற்பலனைக் கொடுப்பவருக்கு வணக்கம்.
82. ஓம் புருஷோத்தமனுக்கு வணக்கம்.
83. ஓம் மிகவும் பழமையான புருஷருக்கு வணக்கம்.
84. ஓம் எல்லாவற்றையும் கடந்தவருக்கு வணக்கம்.
85. ஓம் காலத்தைக் கடந்து நிற்பவருக்கு வணக்கம்.
86. ஓம் தூய்மை வடிவினருக்கு, வெற்றி வடிவினருக்கு, சாதனை வடிவினருக்கு, வணக்கம்.
87. ஓம் நல்ல எண்ணமுடையவருக்கு, நல்ல சித்தமுடைய வருக்கு, வணக்கம்.
88. ஓம் ஆரோக்கியத்தை அருள்பவருக்கு வணக்கம்.
89. ஓம் உணவையும் உடையையும் அருள்பவருக்கு வணக்கம்.
90. ஓம் உலக வாழ்வின் துன்பங்களின் அழிவைச் செய்பவருக்கு வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

91. ஓம் எல்லா விருப்பங்களையும் அருள்பவருக்கு வணக்கம்.
92. ஓம் கல்யாண குணங்களை உடையவருக்கு வணக்கம்.
93. ஓம் விதியின் பயனை அழிப்பவருக்கு வணக்கம்.
94. ஓம் சாதுக்களின் உள்ளங்களில் ஒளிர்பவருக்கு வணக்கம்.
95. ஓம் எல்லா மதங்களையும் ஒப்புக் கொள்பவருக்கு வணக்கம்.
96. ஓம் சாதுக்களின் உள்ளங்களை நன்கு தூய்மை செய்பவருக்கு வணக்கம்.
97. ஓம் சாதகர்களுக்கு அனுக்ரஹம் செய்வதன் பொருட்டு ஆலமரத்தை நட்டவருக்கு வணக்கம்.
98. ஓம் எல்லாச் சந்தேகங்களையும் போக்குபவருக்கு வணக்கம்.
99. ஓம் எல்லா உண்மைகளையும் போதிப்பவருக்கு வணக்கம்.
100. ஓம் யோகிகளின் தலைவருக்கு வணக்கம்.
101. ஓம் யோகிகளின் தலைவர்களால் வணங்கப்படுபவருக்கு வணக்கம்.
102. ஓம் சர்வ மங்களங்களையும் கொடுப்பவருக்கு வணக்கம்.
103. ஓம் எல்லாத் தூய்மைகளையும், சாதனைகளையும், வெற்றிகளையும், நல்குபவருக்கு வணக்கம்.
104. ஓம் ஆபத்துக்களைப் போக்குபவருக்கு வணக்கம்.
105. ஓம் துன்பங்களை அழிப்பவருக்கு வணக்கம்.
106. ஓம் சாந்த மூர்த்திக்கு வணக்கம்.
107. ஓம் மிக எளிதில் சந்தோஷமடைபவருக்கு வணக்கம்.
108. ஓம் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவுக்கு வணக்கம்.

ஆயிரத்தெட்டு நாமங்களை அல்லது ஏன் ஒரு இலட்சம் நாமங்களை உச்சரித்து சஹஸ்ர நாமார்ச்சனை அல்லது லட்சார்ச்சனை என்று சொல்லிக்கொண்டு என்னைப் புகழ்வதில் சிலர் திளைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

உண்மையான இறைஞ்சுதலுடன் ஒருதரம் உச்சரித்தால் அதுவே எனது அனுக்கிரகத்தைச் சம்பாதிக்கப் போதுமானது.

**சத்ய சாயி பேசுகிறார்.**
**பகுதி 7-B, பக்கம் 8.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுக் காத்தல்



பசுக்கள் தந்தை, பத்திர சுரபி, சசீலை, சுமனை என ஐந்து வகைப்படும். அவைகளுள், தந்தை கபில நிறமும், பத்திரை கருநிறமும், சுரபி வெண்ணிறமும், சசீலை புகைநிறமும், சுமனை செந்நிறமும் உடையவனவாம். பசுக்கள் இம்மை மறுமை இரண்டிலும் பயனைத் தரும். பசுக்களுக்கு சாலையை விதிப்படி செய்வித்து,

1. ஆற்றுமண், ஓடைமண், புற்றுமண், வில்வத்தமண், அரசடிமண் என்பவைகளால் நிலப்படுதல் வேண்டும்.

2. முதிர்கன்று, இளங்கன்று, நோயுற்ற கன்று என்னும் இவைகளுக்கு இடங்கள் வெவ்வேறாக அமைதல் வேண்டும்.

3. நாடோறும் கோமய கோசலங்களைப் புறத்தே நீக்கிச் சுத்தம் செய்தல் வேண்டும்.

4. கொசு வராமல் தூபமிடல் வேண்டும்.

5. தீபங்கள் ஏற்றல் வேண்டும்.

பசுக்களை இயக்குமிடத்து சிறிதும் வருத்தம் செய்யாமல் இரக்கத்தோடும், பலாசங்கோலினால் மெல்ல ஓங்கி, போ, போ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று இயக்கல் வேண்டும். இரக்கமின்றிக் கோபத்துடன் அதட்டி அடிப்பவர் நரகத்தில் வீழ்வார். பசுக்களை சாலையினுள்ளே சுவத்தி என்னும் சொல்லைச் சொல்லி, மெல்ல, மெல்லப் புகுவித்து, சிரத்தையோடு புல்லைக் கொடுத்தல் வேண்டும். நோயுற்ற பசுக்களுக்கு வேறிடம் அமைத்து, மருந்து கொடுத்துப் பேணுதல் வேண்டும். பசுக்களை வேனிற் காலத்தில் சோலைகளிலும், மழைக்காலத்தில் மலைச்சாரல் வனங்களிலும், பனிக்காலத்தில் வெயில் மிகுந்த வெளிகளிலும் இடருறாவண்ணம் மேய்த்தல் வேண்டும்.

பசுக்கள் தரும் பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்னும் பஞ்சகவ்வியங்களையும், கடவுளுக்கு அபிஷேகம் பண்ணுவித்தல் வேண்டும். பாலை இரண்டு மாதம் செல்லும் வரை கன்று பருகும்படி விட்டு பின் கறந்து கடவுளுக்கு அபிஷேகம் பண்ணுவித்தல் வேண்டும். கன்று பாலுண்டு மலையை விடுத்த போது சலத்தினாலே முலையைக் கழுவிக் கறத்தல் வேண்டும். ஆசை மிகுதியினாலே கன்றுக்குப் பால் விடாது கறந்தவன் நரகத்திலே வீழ்ந்து நெடுங்காலம் வருந்திப் பின்பு பூமியிலே பிறந்து கடும் பசியினாலே வீடுகள் தோறும் இரப்பான். கபிலையின் பாலை கடவுளுக்கே கொடுக்காது தாம் பருகின் நரகத்தில் வீழ்வார். புலையர்கள் பசுக்களின் சாலையிலே புகுந்தார்களாயின் எண்ணில்லாத காலம் எரிவாய் நரகத்துள் வீழ்ந்து வருந்துவார்கள். அவர்களுக்குப் பரிகாரமில்லை. பசுக்களை இடர் நீக்கக் காத்தவர்களுக்கும் மலட்டுப் பசுவின் மேலேனும் இடபத்தின் மேலேனும் பாரம் ஏற்றினவர்களுக்கும், இடபத்தில் ஏறினவர்களும் நரகத்தில் வீழ்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லை யிரும்பிறவி சூழுந்தளை நீக்கி
அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன்அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்றஇத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுஇறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## வையத்துள் வாழ்ந்து தெய்வமான வேலணை மேற்கூர்

# அமரர் திருமதி முத்துத்தம்பி சிவயோகம் அவர்களின் கீர்த்தி விருத்தாந்தப் பாக்கள்

நல்லை நாவலர் அடியொற்றிச் சைவமும்
நற்றமிழும் வளர்த்தவோர் நன்நிலம்,
வெள்ளந் தாழநெல் மேல்வந்து பொற்கதிர்
வீசுந் தென்றலில் ஆடக்காண் பைஞ்சிறைக்
கிள்ளை கொய்யப் பார்த்தாவலித் துள்மகிழ்
கிஞ்சுக விதழ்ப் பஞ்செனும் மெல்லடிப்
பள்ளிகள் செலும் பிள்ளைகள் கூச்சலால்
பறந்து மீள்வன வாமெழில் வேலணை. 1

கல்லுங் காடுந் திருத்திப் புகையிலைக்
கன்றுகள் நட்டு அருளொடு வரும்பெரும்
செல்வங் கொண்டு அறம்பல இயற்றியும்
திருவிழாவன்ன தானங்கள் செய்வித்தும்
இல்லையென்று இரப்பவர்க் கீய்வதும்
இல்லிருந்து இட்டுண்டும் வாழ்தலால்
எல்லையில்புகழ் வேலணை மேற்குஊர்
என்ற இந்தநல் ஊரின் நாற்றிசையிலும். 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய மணி ஓசைகள் செவியுறும்
அந்தணர் வேத மந்திர ஒலிமிகும்
சீலச் சைவர்சொல் தேவாரப் பண்இசை
செவிமடுத்த நாகண வாய்ப் பட்சி
ஆலவா யரன் புகழினை மிழற்றவும்
அணங்கனார் குளித் தலங்கரித் துணர்வொடு
காலைவேளை மலரும்நாண் மலர்களை
காந்தளம் விரல்கொண்டு பூசைக் கெடுப்பரே. 3

நீறு பொலிந்த மேனியர் ஆடவர்
நின்றும் இருந்தும் நடந்துமைந் தெழுத்தினை
கூறுவர், பெண்கள் அர்ச்சனைப் பொருளொடு
கோவிற்கேகப் பிள்ளைகள் தூவெள்ளைச்
சீருடை யோடு பள்ளிகட் கேகவும்
செய்யுந் தொழில்தெய்வம் என்ற தொழிலாளர்
ஏரும் மாடும்மண் வெட்டி இவற்றொடு
ஏழுங் காட்சிகள் காணுமிவ் வூரிலே. 4

“பகடு நடந்தகூழ் பல்லோர்க்கும் கொடுத்துயிர்ப்
பசிநோய் தீர்த்த மருத்துவர் செல்வமோ
சகடைக் கால்போல வரும்போகும் புகழெனில்
சாகா” தென்ற சுப்பிர மணியவேள்
அகம் பொருந்திய இராசம்மா என்றபேர்
ஆயிழைதனைச் சேர்ந்தறம் புரிந்தால்
இகம் பொருந்திய சிவயோகம் மகள்தோன்றி
ஏந்தல் பொன்முத்துத் தம்பிதன் துணையானாள். 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தளிர் மேனிச்சிவ பாக்கிய மாமெழில்
செல்விமுன்வர இராசையாத் தோன்றல்பின்
சுந்தரப் பொன்அன்ன லட்சுமி யாளொடு
சோர்வில்லாத கணபதிப் பிள்ளையும்
வந்தணைந்தொரு வயிற்றினில் தோன்றிய
வாஞ்சை மிக்கபேர் சகோதர உறவொடு
இந்திரைப் போகம் துய்த்தனள் சிவயோகம்
ஏவல் காவல் எல்லாம் மிகுக்கவே. 6

கண்ணோ டுள்ளக் கருத்தையுங் கவர்ந்தவோர்
காளைமுத்துத் தம்பிதம் தோள் பற்றி
தன்சுகங் கெடத் தலைவனின் தொழில்களில்
தலைபட் டாங்கொரு கைகொடுத் துதவிய
பெண்களில் நல்லாள் சிவயோகம் கணவர்தம்
பிரியந் தேர்ந்தவ் வழிநின்று வியப்புறும்
வண்ணம் வாழ்ந்து அமரராம் கணவனின்
வழிதொடர்ந்து வானிடம் புகுந்தனள். 7

கணவற் கேற்ற மனைவியாய் வரும்பொருள்
கண்டு சிக்கனத் தோடும் செம்மையாய்
இனத்து ளார்க்கும் ஏழ்மை வறுமையை
எடுத்துரைக் காத பெருமையும் அருமையும்
அணைய நின்ற அன்னை சிவயோகம்
அருளாற் பெற்றதம்மக்கள் பெருமைகள்
புனைய நின்றவள் பொறுமையிற் பூமகள்
பொருந்த நின்றுவிண் போந்தனள் என்பரே. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசிந்து வாடிய முகங்களைப் பார்த்ததும்
பதைத்து ஓடிப்போய் பழையதே ஆயினும்
ருசிக்கும் சொல்லொடு ஊட்டுவாள் ஊரவர்
உள்ளங் கொள்ளைகொள் சிவயோகம் தான்தெரிந்
தெடுத்த காரியம் யாவினும் வெற்றிபெற்
இன்பஞ் சூழ வாழ்ந்தினிப் போதுமென்
றெடுத்த குஞ்சித பாதப்பொன் நீழற்கீழ்
எய்தினாளென்று ஊர்புகழ்ந் தேத்தவே. 9

பணிவும் நேர்மையும் மிகவுள்ள தனதுயர்
பத்தாவுக் கேற்புடைப் பதிவிரதை ஆயவள்
அணிகொள் கற்பினள் அன்பினள் மக்களுக்
கறிவும் ஞானமும் நல் ஒழுக்கமும் பயிற்றிய
துணிவுளால் இங்கு பெய்யெனப் பெய்கின்ற
தூமழை யன்ன அருமையள் இளம்பிறை
அணியும் ஈசன் பதமலர்த் தேனுண்ண
அளியொன் றாகிவிண் அடைந்தனள் ஆம்கொலோ. 10

அரிய மானிட னாகப்பிறந் துயர்
அறிவும் கணித ஞானமும் கைவர
உரிமை கொள்முத்துத் தம்பிவேள் ஒப்பில்லா
ஒருத்தி நல்லெழிற் சிவயோகம் துணையென
வரித்துக் கொண்டு இல்லறம் புரிந்ததும்
வாழ்வின் நற்றவம் செய்தலால் இறையருள்
புரியப் புத்திரப் பேறுகண் டின்புடன்
புளகுற்று நின்ற வாறினிப் பேசுவாம். 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கிதப் பொன்மயில் இராசேஸ் வரியும்பின்
ஏரார் சண்முக ராசாவை மகேந் திரனெனும்
பொங்கொளி ஞாயிறை பூவைநேர் மகேஸ்வரிப்
பொன்னைச் செல்வ ராசெனும் வள்ளலை
திங்களம் முகச் செல்வி நாகேஸ் வரி யெனும்
செய்ய வான்நுதற் செல்வியைப் பேர்புகழ்
தங்கும் யோக ராசனோ டெழுவரைத்
தந்ததாய்சிவ யோகம்விண் சார்ந்தாளே. 12

கல்வி கேள்வியில் முற்றிய அறிவொடும்
கடமை கண்ணியம் கட்டுப் பாடெனச்
சொல்லியநல் நெறிகளில் நிற்பவர்
சோர்விலாது உழைப்பதாற் பெரும்பொருட்
செல்வரான மக்களை எச்சத்தால் உணர்த்திய
சிவயோகந் தக்க சிந்தையள் என்பதால்
நல்அருள் வந்து கூட்டச் சிவனடி
நண்ணினாளென்று வையகம் போற்றுமே. 13

## வேறு

தம்மிற்றம் மக்கள் பெற்ற
தகுதியும் அறிவுங் கண்டு
மன்னுயிர்க் கினிய ராக
வாழவைத் திடுங் கருத்தால்
அன்னையும் பிதாவுஞ் சுற்றம்
ஆம்பெருஞ் சனமும் சேர்ந்து
பண்ணிவைத் தமைந்த வாழ்வு
பற்றியிங் கெடுத்து ரைப்பாம். 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தமிழ் மக்கள் உற்ற
இடர்தீர்த்த "ஏஜி ஏ" ஆம்
சுந்தரப் பெரியோன் இரத்தினம்
சுகிராசேஸ் வரிகை பற்றி
வந்தது கண்டுள் பூத்த
வார்குழல் சிவயோ கப்பொன்
சந்திர சூடர் பாதம்
சார்நதனள் கவன்ற தூரே!. 15

ஆர்க்கின்ற கடல்சேர் காலி
அமர்ந்துயர் வர்த்த கத்தின்
போர்கொண்ட "பீ எம் புத்தா"
பெரியனாம் சண்முக ராசன்
சீர்கொண்ட செம்மல் இன்பத்
திருமுறைச் செல்வி சேர
நேர்மகிழ் சிவயோகப் பொன்
நிமலன்தாள் மலர்கண் டாளே. 16

வசிட்டரின் அறிவைப் பெற்று
•வாலியின் வலிமை பெற்ற
விசித்திரர் கணிதன் கல்வி
வித்தக அதிபன் மகேந்திரன்
சசித்திரு அழகுக் கற்பார்
சாரதாம் பிகையைச் சேரத்
திருப்திகொள் சிவயோகப் பொன்
சிவன்திரு வடிசேர்ந் தாளே. 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதெழில் மகேஸ்வரித் தேன்
மணாளனாய் வரித்தாள் மிக்க
தோதுள பயிர்விஞ் ஞானத்
தோன்றலைத் திருச்செல்வ னாம்
போதனைப் பேரா சானைப்
போற்றிய சிவயோகப் பொன்
தாதவிழ் கொன்றை யந்தார்த்
தலைவன்சீர் அடிபெற்றாளே. 18

வர்த்தகத் துணையாய் காலி
வந்தடைந் துயர்ந்த "பி" எம்
இஸ்தாபனச் செல்வ ராசன்
புகல் சந்தர வதனியாய
உத்தமி கரத்தின் மாலை
உரத்தேற்றான், உவகை யூறிச்
சித்தங்கொள் சிவயோகப் பொன்
சிவகதி சேர்ந்தா ளாமே. 19

நாற்குணப் படைகொள் நாகேஸ்
வரியெனும் நளினத் தேனீ
வேற்கணாள், மகேந்திர லிங்க,
வியாபார வித்தை கற்ற
போர்க்குணத் தானைச் சேரப்
புளகுற்ற சிவயோகப் பொன்
மாற்றரும் விதியின் போக்கில்
மன்றன் ஊர் சென்றாளாமே. 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானேயோர் யோகாய், யோக
ராஜனாய் வந்த மைந்தன்
மானேபோல் வந்த மாமன்
மகள்பவா னிகை மாலை
தோளேற்ற போது கண்டு
துலங்குமுள் உவகை ஆர
வானேற்றாள் சிவயோகப் பொன்
வள்ளல்செந் தாள்நிழற்கே. 21

எச்சமாய் விட்டுச் சென்ற
எப்பொருள் களுக்கும் மேலாம்
மச்சமாம் மகளிர் மக்கள்
மனங்கொண்ட சிவயோகப் பொன்
இச்சகம் கீர்த்தி பேச
இறைமலர்த் தாள்கை பற்றிப்
பொய்ச்சடம் துறந்தாள் என்றே
புகன்றதிவ் வுலகந் தானே. 22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

## நெட்டாசிரிய விருத்தம்

வேராகி விழுதாகி கிளைதாங்கி வாழுங் குடிப்பரப்பில்
பேராதரித்த லலிதா கவிதா யசோ செந்தூரன் செந்தில் என்ற
பேரர் பேர்த்திகளொடு பின்னும் தொடர்ந்து நீண்டவரி
ஆராரெனில் தனுஜா, அபிநயா, அடுத்துரமேஸ், சுரேஸ் ரூபினியும்
வாராதுவந்த சஞ்சீவன் தீபிகா ஆனபேரர்க ளோடமுத்து
சீரார்பு லேந்தினி கோகுலன் துவாரகன் விதுசா துளசி தாசும்
ஏரார் கஜரூபன் மதுரா எனப்பேரர் பேர்த்தி களையுங் கண்டு
போவியற்கைப் பெரும்பே றடைந்தாள் சிவயோகப் பெண்
இவளே! 23

அன்னையே பெற்ற பிள்ளைகள் செய்யும்
அறம்பல கண்டு மகிழ்ந்தனை!
கன்னலம் மொழிப் பேரர் பேர்த்திமேற்
காதல்கொண் டுடிக் கூடினை!
உன்னிடத்திரப் போர்க்கு ஏற்றவை
உவந்து நீமிக மகிழ்ந்தனை
விண்ண டைந்ததென் ஆங்கு உன்துணை
வேண்டி "வா"வெனக் கேட்டாரோ! 24

செந்நெற் சூடுஆர் செருத்தனை அம்மன்
தேர்த்திரு விழாச் செய்தனை,
பன்நலங் களும்வந்துன் தாளின்கீழ்
பணியக் கண்டினிப் போதுமாம்
சொன்ன லம்உள்ள சிவயோகப் பொன்னே
சோர்வி லாதஇல் அறத்தினாய்
என்ன வாறுநீர் விண்ணிற் கேகுவீர்
இங்குளோர் நனிவருந் தவே? 25



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணர் தேவர்கள் விருந்து ஏற்றனை
விதியென விட்டு விடுகிறோம்
பொன்னுல கம்நீர் புகுந்தனை இது
போற்றத் தக்கது ஆயினும்
தன்னலம் எனும் சுயநலம் வேட்டு
தலைவன் தாள்சரண் பெறுதியேல்
என்ன நீதியோ யாமிருக்கநீர்
இறைவனா ருலகடைந் தது? 26

பசியோடு நோய் துன்பம் வருத்தவும் நாங்கள்
பலகால மாயிங்கு வாடும்போது
புசிஎன்று அன்னம் படைத்தவள் நீவிண்
புகுந்தனை கேட்ட திர்ந்தோம்
வசியோடு வளம்பல பெற்றவள் நீமிகு
வாசியான வீடு சேர்ந்து விட்டாய்
கசிவோடு எம்குறை முறையீட்டை இறைவன்
காதிலே மெல்லிதாய் சொல்லுதியே. 27

**தூங்குவது போல் இறப்பு தூங்கி**
**விழிப்பது போல் பிறப்பு**

*- தமிழ்மறைச் சாரம்*

**உயிர்கள் அழிந்து போவதில்லை - அவை**
**செய்வினைக் கேற்ப**
**மீண்டு மீண்டும் பிறப்பெடுக்கும்**

*சைவசித்தாந்தம்*

**சிவாஜி**
கூடல் - வேலணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவெழா நிலையில் நவில்கின்றோம் நன்றி!

அன்பிற்கு இலக்கணமாக வாழ்ந்து கண்ணை இமை காப்பது போல எமைக் காத்துக் கலங்கரை விளக்காககத் திகழ்ந்த எமது பாசமிகு தாயார் நோய்வாய்ப்பட்டிருந்த போது வருகை தந்து ஆறுதலளித்த உறவினர்களிற்கும் நண்பர்களிற்கும் வைத்திய சேவை புரிந்த வைத்தியர் களுக்கும், தாதிமார்களிற்கும் எமது மாதாவின் மறைவுச் செய்தி கேட்டு இரக்கமுடன் ஓடி வந்து எம் துயரில் பங்குகொண்டது மட்டுமன்றி கிரியைகளிலும் இறுதி யாத்திரையிலும் பங்கு கொண்டவர்களுக்கும் தொலைபேசி தந்தி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்து எமது துயரைப் பகிர்ந்துகொண்ட அன்பர்களிற்கும் அஞ்சலி உரையாற்றியோர்களிற்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வழங்கியோருக்கும் இலங்கையின் வெவ்வேறு பாகங்களி லிருந்தும் வருகைதந்து மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களிற்கும் அந்தியேட்டி, சபிண்டிகரணத்தில் கலந்து கொண்டவர்களிற்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிய அனைவரிற்கும் இம் மலரினை அழகுற அச்சிட்டு தந்த லஷ்மி அச்சகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**230A, நாவலர் வீதி,** **- குடும்பத்தினர் -**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

**சுப்பிரமணியம் + இராசம்மா**

**சிவபாக்கியம்**

**சிவயோகம் + முத்துத்தம்பி**

**இராசையா**

**க**

## ★ சிவயோகம் + முத்துத்த

**இராஜேஸ்வரி** + இரத்தினம்

**சண்முகராசா** + திருமுறைச்செல்வி

**மகேந்திரன்** + சாரதாம்பிகை
- தனுஜா
- அபிநயா

**மகேஸ்வரி** + திருச்செல்வம்
- ரமேஸ்
- சுரேஸ்
- ருபினி

**செல்வ** + சந்திர
- சஞ்சீ
- தீபி

இராஜேஸ்வரி + இரத்தினம் children:

லலிதா + லிங்கேஸ்வரன்
- வைஸ்ணவி

கவிதா + கருணாநிதி
- சேந்தன்

யசோதா + ஜெயகுமார்

செந்தூரன்

செந்தில்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

சுப்பிரமணியம் + இராசம்மா

இராசையா

கணபதிப்பிள்ளை

அன்னலெட்சுமி

## ...வயோகம் + முத்துத்தம்பி

...திரன்
+
...ம்பிகை
...வஜா
...நயா

மகேஸ்வரி
+
திருச்செல்வம்
ரமேஸ்
சுரேஸ்
ரூபினி

செல்வராசா
+
சந்திரவதனி
சஞ்சீவன்
தீபிகா

நாகேஸ்வரி
+
மகேந்திரலிங்கம்
புவேந்தினி
கோகுலவாசன்
துவாரகீசன்
விதுசாயினி
துளசிதாசன்

யோகராசா
+
பவானி
கஜரூபன்
மதுரா

...சாதா
+
...குமார்

செந்தூரன்

செந்தில்மாறன்

★ இக்குறியீடுகள் அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரே கிருஷ்ணா! ஹரே ராமா!




## கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்? எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ, அது இங்கிருந்தே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.

*"இதுவே உலக நியதியும்,*
*எனது படைப்பின் சாராம்சமுமாகும்"*

*- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பசுவதை ஒழிப்போம்

## கோமாதா எங்கள் குலமாதா

தாயானவள் குழந்தை பிறந்து 6 மாதம் அல்லது இரு வருடங்கள் வரை தமது பாலை கொடுத்து வளர்க்கின்றாள். ஆனால் பசுவானது குழந்தை பிறந்ததிலிருந்து குழந்தையின் வாழ்நாள் முடியும் வரை தமது பாலைக் கொடுத்து நல்ல ஆரோக்கியமான புத்திஜீவிகளை உருவாக்குகின்றது.

இடபங்கள் வயல் வேலைகள், வண்டி இழுத்தல் போன்ற நற்பணிகளை ஆற்றுகின்றன. எல்லாவற்றிலும் மேலாகப் போற்றப்படுகின்ற நோயைத் தீர்க்கக்கூடிய சிவ சின்னங்களில் ஒன்றான விபூதியை பசுவினுடைய சாணகத்திலிருந்து பெறுகின்றோம்.

பசுவில் முக்கோடி தேவர்கள், மகாலெட்சுமி, விஷ்ணு, சிவன் போன்ற தெய்வங்கள் வாசம் செய்கின்றன. இவ்வாறான செயல்களைப் புரியும் எமது தெய்வமாகிய கோமாதாவைக் கொன்று புசிக்கலாமா? சிந்தியுங்கள்! செயற்படுங்கள்.

**வாழ்க பசுக்கள்! வாழ்க இடபங்கள்! வளர்க மானிடங்கள்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by: LUXMI PRINTER - [illegible] 2458273, 2473533 Fax: 2330588 E-mail: luxmiprint@sltnet.lk